1995 ஏப்ரல் 6]
259—

சத்தியமங்கலம் தொகுதியில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

***25268**—திருமதி அ. தி. சரஸ்வதி :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், சத்தியமங்கலம் தொகுதி, கொத்தமங்கலம், ராஜன் நகர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் விரைவில் செயல்படுத்தப்பட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கொத்தமங்கலம் மற்றும் 4 கிராம பஞ்சாயத்துக்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ. 253.60 இலட்சங்களுக்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை டிசம்பர் 1996-க்குள் முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது.

முற்பகல் 11.00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திருமதி அ. தி. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும்; தர்மம் நின்றே வெல்லும், என்றும் தர்மம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பக்கத்திலே வெல்லும் என்று கூறி (மேசையைத் தட்டும் ஒலி) நமது மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என் நன்றியை அவர்களின் பொற்பாதங்களில் காணிக்கையாகச் செலுத்தி, அமைச்சரவர்களுக்கும் நன்றி தெரிவித்து, இந்தத் திட்டம் இந்த ஆண்டுக்குள்ளே முடிவடைய அமைச்சர் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வெற்றியைத் தவிர வேறொன்றும் அறியாத வெற்றித் தலைவியை நாம் பெற்றிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, தமிழகம் ஒரு நல்ல தலைமையிலே இயங்கிக் கொண்டிருக்கிற காட்சியை தமிழக மக்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதிக்கும், இந்த 2 கோடியே 53

இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலே தயாரிக்கப்பட்டிருக்கின்ற இந்தத் திட்டத்தில் போர்க்கால அடிப்படையிலே இன்றைக்குப் பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. சுமார் 47 கிலோ மீட்டர் பகிர்மானக் குழாய்கள் வழியாகக் குடிநீர் விநியோகிப்பதற்கான அத்துணை நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு தலைமைப் பணியிடமும், பிரதானக் குழாய்கள் பதிக்கின்ற அந்தப் பணியும் செய்வதற்காக ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையில், திட்டம் ஒரு பெரிய திட்டம் என்ற காரணத்தினால் சுமார் 45,000 மக்களுக்கும் மேலாக இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலே பயன் அடைகின்ற காரணத்தினாலே, அவசரத்திலே செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது. இன்றைக்கு சுமார் 19 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் இந்தத் திட்டத்திலே உள்ளடக்கியிருக்கின்ற காரணத்தினாலும், இதற்குப் பணி முடிக்க ஆக வேண்டிய கால அவகாசம் கருதி அடுத்த ஆண்டு 1996-க்குள்ளாக முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி அ. தி. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் மனத்தில் மங்காப் புகழ் பெற்று மகராசியாகத் திகழும் இதய தெய்வத்தின் பொற்கால ஆட்சியில் கொத்தமங்கலம், ராஜன் நகர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், பன்னாரி குடியிருப்புகள் பகுதிக்கு சுமார் ரூ. ஐம்பது இலட்சம் வரை குடிநீர் வடிகால் வாரியம் பணம் கட்டப்பட வேண்டுமெனத் தெரிவித்திருக்கின்றார்கள். ஆனால் இப்பணத்தை பன்னாரி கோவில் மூலம் கட்ட பணம் இல்லை. கிராமப் பஞ்சாயத்துக்கு உட்பட்ட பகுதிகளை மாண்புமிகு இதய தெய்வம், தமிழகத்தின் 100 ஆண்டுக்கால முதல்வர் அம்மா அவர்கள் கிராமப் பகுதி குடிநீர் வாரியமே குடிநீர்த் திட்டத்தை எடுத்து செயல்படுத்தலாம் என அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, அமைச்சரவர்கள்- - பன்னாரி பொதுமக்கள் வாழக்கூடிய கிராமப் பகுதி ஆகும். ஆகவே, அமைச்சரவர்கள்-- வாரியமே இலவசமாகக் குடிநீர்த் திட்டத்தை குறைந்த அளவிற்காவது எடுத்து சுமார் ராஜன் நகரிலிருந்து பன்னாரி வரை தண்ணீர் கொண்டு வர குறைந்த அளவுத் தொகையாவது பெற்றுக் கொண்டு, திட்டத்தை நிறைவேற்றுவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்திருக்கிற அந்த ராஜன் நகர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், பன்னாரி அம்மன் கோயிலுக்கு வந்து போகிற சுமார் பத்தாயிரம் மக்கள் தொகைக்கும் சேர்த்துத்தான் உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த அடிப்படையிலே

1995 ஏப்ரல் 6]

இன்றைக்கு ஆய்வுக்காக என்று சிறு தொகையை அங்கேயிருக்கிற உள்ளாட்சி நிறுவனங்கள் செலுத்த வேண்டிய கட்டாயம் இருக்கிறது. அதையும் குடிநீர் வடிகால் வாரியமே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொன்னால் நிதிச்சுமை அதிகமாக ஆகிற காரணத்தினாலே அது ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் இந்தப் பிரச்சினை குறித்து வாரியத்திற்கு அறிவுரை வழங்கி ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 260, திரு. ஆர். பி. பரமசிவம், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

260—

கல்வராயன் மலையில் தேனீ வளர்ப்புப் பண்ணை ஏற்படுத்துதல்.

19215—திரு. ஆர். பி. பரமசிவம் :

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்வராயன் மலையில் "தேனீ வளர்ப்புப் பண்ணை" ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டத்தில் உள்ள கல்வராயன் மலைப் பகுதியிலே தேனீ பண்ணை அமைத்தல் அரசு செயற்குறிப்பில் இல்லை.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வராயன் மலை என்னுடைய மாவட்டத்தினுடைய மேற்கு எல்லையாக இருக்கின்றது. அங்கு மலைவாழ் மக்கள் கிட்டத்தட்ட 300, 350 கிராமங்களில் வாழ்ந்து வருகிறார்கள். பொருளாதார வளர்ச்சியில் அடித்தட்டில் இருக்கின்ற அந்த மக்களுக்குப் பொருளாதாரத்தில் வளர்ச்சியடையும் வகையில் இந்தத் தேனீக்கள் பண்ணை வைத்து அதன் மூலம் அவர்கள் பொருளாதாரம் வளர்ச்சியடைய அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.